செய்தி வெளியீடு எண்– 540 நாள்–7.7.2008

**செய்தி வெளியீடு – 7.7.2008**

**2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளுக்கான**
**குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான**
**70 தமிழ்த் திரைப்படங்களுக்கு மொத்தம் 4 கோடியே 90 இலட்ச ரூபாய் அரசு மானியம்**
**முதலமைச்சர் கலைஞர் ஆணை**

தமிழக அரசு ஆண்டுதோறும் சிறந்த தமிழ்த் திரைப்படங்களுக்கும், நடிகர்–நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்குப் பரிசுகளும், தமிழ்த் திரையுலகில் சாதனை புரிந்தவர்களுக்கு கலைத்துறை வித்தகர் விருதுகளும், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு விருதுகளும் ஆண்டுதோறும் வழங்கும் திட்டத்தின்கீழ் முந்தைய அ.தி.மு.க. அரசினால் விருதுகள் வழங்கப்படாமல் விடுபட்டிருந்த 2005ஆம் ஆண்டிற்கும், கழக அரசு அமைந்தபின் 2006ஆம் ஆண்டிற்குமாக விருதுகளை வழங்கி தமிழ்த் திரைப்பட உலகிற்கு ஊக்கமளித்திட முன்வந்துள்ளது.

அதைப்போலவே, "சின்னத்திரை" தொடர்கள் மற்றும் நடிகர்–நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் புதிய திட்டத்தை இந்த அரசு அறிமுகம் செய்து; அதன்படி 2006ஆம் ஆண்டிற்கான சிறந்த "சின்னத்திரை" தொடர்களுக்கும், நடிகர்–நடிகையர்களுக்கும், தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் உற்சாகம் அளித்திடும் வகையில் விருதுகளை அறிவித்துள்ளது.

அவற்றைத் தொடர்ந்து, குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2005 அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் வழங்கப்படாமல் விடுபட்டிருந்த திரைப்படங்களுக்கும் அரசு மானியம் வழங்கப்பட வேண்டும் என முடிவு செய்து, மானியம் பெறுவதற்குத் தகுதி வாய்ந்த திரைப்படங்களைத் தேர்வு செய்திட நீதியரசர் திரு.பொன்.பாஸ்கரன் அவர்களைத் தலைவராகவும், திருமதி சரோஜா தங்கவேலு, திருமதி ஸ்ரீபிரியா ஆகியோரையும், செய்தித் துறைச் செயலாளர், வணிகவரித் துறைச் செயலாளர், வணிகவரித் துறை இணை ஆணையர், உள்துறை துணைச் செயலாளர், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட தேர்வுக் குழு அமைக்கப்பட்டு, 2005 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களைத் தேர்வு செய்திட 8.9.2006 அன்றும், 29.5.2007 அன்றும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, 2005ஆம் ஆண்டுக்கான மானியத்திற்காக 45 திரைப்படங்களையும், 2006ஆம் ஆண்டு மானியத்திற்காக 49 திரைப்படங்களையும், ஆக மொத்தம் 94 திரைப்படங்களைத் தேர்வுக் குழுவினர் பார்வையிட்டு, 2005ஆம் ஆண்டிற்கு 34 திரைப்படங்களும், 2006ஆம் ஆண்டிற்கு 36 திரைப்படங்களும் அரசு மானியம் பெறுவதற்குத் தகுதிவாய்ந்த திரைப்படங்களாக அரசுக்குப் பரிந்துரை செய்தது.

தேர்வுக்குழு வழங்கிய பரிந்துரைகளை ஏற்று, அதன்படி 2005ஆம் ஆண்டிற்கு,

1. கஸ்தூரி மான்
2. வெற்றிவேல் சக்திவேல்
3. டான்சர்
4. பொன்மேகலை
5. 6.2"
6. மண்ணின் மைந்தன்

7. சிதம்பரத்தில் ஒரு அப்பாசாமி
8. ABCD
9. அயோத்தியா
10. மந்திரன்
11. அறிவுமணி
12. பவர் ஆப் உமன்
13. அன்பே வா
14. ஸாரி எனக்கு கல்யாணமாயிடிச்சி
15. இங்கிலீஷ்காரன்
16. ஆயுள்ரேகை
17. காதல் எப்ளம்
18. வணக்கம் தலைவா
19. ஆதிக்கம்
20. கலையாத நினைவுகள்
21. பெருசு
22. பெண் நிலா
23. ப்ளஸ் கூட்டணி
24. சூப்பர்டா
25. காற்றுள்ளவரை
26. உன்னை எனக்கு புடிச்சிருக்கு
27. றெக்கை
28. வரப்போகும் சூரியனே
29. ஒருத்தி
30. அலையடிக்குது
31. உள்ளக்கடத்தல்
32. ரைட்டா தப்பா
33. செல்வம்
34. அந்த நாள் ஞாபகம்

– ஆகிய 34 திரைப்படங்களுக்கும்,

2006ஆம் ஆண்டிற்கு,

1. தகப்பன் சாமி
2. காதலே என் காதலே
3. கிழக்கு கடற்கரை சாலை
4. இலக்கணம்
5. குருஷேத்திரம்
6. மறந்தேன் மெய் மறந்தேன்
7. செங்காத்து
8. தூத்துக்குடி
9. ஆட்டம்
10. தொடாமலே
11. நாகரீக கோமாளி

12. காசு
13. ஆச்சார்யா
14. ஒரு காதல் செய்வீர்
15. அடைக்கலம்
16. மண்
17. மழைத்துளி மழைத்துளி
18. பாசக்கிளிகள்
19. ஜெயந்த்
20. அழகிய அசுரா
21. கணபதி வந்தாச்சி
22. பிரதி ஞாயிறு 9 முதல் 10.30 வரை
23. சுயேட்சை எம்.எல்.ஏ.
24. மது
25. ஆவணி திங்கள்
26. திருடி
27. அமிர்தம்
28. கலிங்கா
29. கைவந்த கலை
30. இளவட்டம்
31. கொக்கி
32. மனதோடு மழைக்காலம்
33. என் காதலே
34. இது காதல் வரும் பருவம்
35. டான்சேரா
36. சாசனம்

– ஆகிய 36 திரைப்படங்களுக்கும், ஆகமொத்தம் 70 திரைப்படங்களுக்கு 7 இலட்ச ரூபாய் வீதம், 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் அரசு மானியம் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று ஆணையிட்டுள்ளார்.

திரைப்படங்களுக்குத் தமிழில் பெயர் சூட்டப்படுவதை ஊக்குவிக்கும் வகையில், தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்களுக்கு வரிவிலக்கு அளித்து கழக அரசால் ஏற்கனவே அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அரசாணை நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாகவே, மேற்படி 70 திரைப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளமையால், அப்பட்டியலில் ஆங்கிலக் கலப்புள்ள தலைப்புகள் கொண்ட ஒருசில திரைப்படங்களுக்கும் மானியம் கிடைத்திடும் வகையில் விதிகளைத் தளர்த்திட அரசு முடிவு செய்துள்ளது.

இனிவரும் காலத்தில் தமிழில் பெயரிடப்படும் படங்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின்கீழ் அரசு மானியம் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

*****

வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.